தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 4-8-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## ஆடிப்பட்டத்திற்கான காய்கறிகளின் விலை முன்னறிவிப்பு - தக்காளி, கத்திரி மற்றும் வெண்டை

விவசாயிகளின் ஆடிப்பட்ட நடவுக்கு ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள, வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கும் வேளாண் விற்பனை தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் முக்கிய காய்கறி பயிர்களான தக்காளி, கத்திரி மற்றும் வெண்டை ஆகியவற்றுக்கு கீழ்கண்ட விலை முன்னறிவிப்புகளை வெளியிடுகின்றது.

### தக்காளி

தமிழ்நாட்டில் தக்காளி வரத்து ஜுன்-ஜுலை (சித்திரை நடவு) மற்றும் அக்டோபர்-நவம்பர் (ஆடி நடவு) ஆகிய மாதங்களில் அதிகரித்துக் காணப்படும். கர்நாடகா மற்றும் ஆந்திராவிலிருந்துவரும் தக்காளி வரத்து தமிழ்நாட்டில் வரத்து குறைவான பருவங்களில் (ஏப்ரல், மே, ஆகஸ்டு, செப்டம்பர் மற்றும் டிசம்பர்) தேவையை பூர்த்தி செய்யும். அதிகவரத்து பருவமான ஜுலையிலும் இந்த ஆண்டு மொத்த சந்தைகளான கோயம்புத்தூர், ஒசூர், ஒட்டன்சத்திரம் மற்றும் தலைவாசலில் குறைந்த வரத்தே காணப்படுகிறது. வறட்சி மற்றும் கோடை பருவமழை தவறியதுமே குறைவான அளவு சாகுபடிக்கான காரணங்களாகும். வர்த்தக ஆய்வின்படி கர்நாடகா மாநில கோலார் சந்தையில் கொல்கத்தா மற்றும் ஒரிசா வியாபாரிகள் கொள்முதல் செய்யத் தொடங்கியிருப்பதால், அங்கிருந்து கோயம்புத்தூர் மொத்த சந்தைக்கு தக்காளி வரத்து குறையத் தொடங்கியுள்ளது. நாச்சிபாளையம் சந்தையிலும் வரத்து வெகுவாக குறைந்து காணப்படுகின்றது.

கடந்த மூன்று ஆண்டுகளின் தொடர் வறட்சியின் காரணமாக ஒட்டன்சத்திரம் மொத்த சந்தைக்கு வழக்கத்தை விட குறைவான வரத்து உள்ளது. ஒட்டன்சத்திரம் பகுதி வியாபாரிகள் உடுமலைபேட்டை பகுதி விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்து தங்கள்

தேவையைப் பூர்த்தி செய்கின்றனர். தலைவாசல் மொத்த சந்தையில் ஓரளவு வரத்து காணப்படுகிறது. இப்பகுதியில் உள்ள கருமாந்துரை மலைப்பகுதியில் இவ்வாண்டு பெரும்பாலான விவசாயிகள் பந்தல் முறை தக்காளி சாகுபடியை கோடை பருவத்தில் மேற்கொண்டதால் தற்போது சந்தை தேவையை ஓரளவு பூர்த்தி செய்ய முடிகிறது.

பொதுவாக ஜூலை முதல் அக்டோபர் வரையான காலகட்டங்களில் தக்காளி விலை குறைந்து காணப்படும். மாறாக தற்போது கர்நாடகா மாநில மைசூர் மற்றும் கோலார் பகுதிகளிலிருந்து கோயம்புத்தூர் மொத்த சந்தைக்கு வரத்து குறைந்துள்ளதால் விலை அதிகரித்துள்ளது. தற்போது மேற்கூறிய மொத்த சந்தைகளில் தக்காளி விலை அதன் அளவு மற்றும் தரத்திற்கேற்ப கிலோ ரூபாய் 25 முதல் 30 வரை உள்ளது. எதிர்வரும் ஆகஸ்டு - அக்டோபர் மாதங்களில் விலை நிலவரம் பற்றி விவசாயிகள் அறிந்து கொள்ள ஏதுவாக கடந்த 11 வருடங்களில் கோயம்புத்தூர், ஒட்டன்சத்திரம், ஒசூர் மற்றும் தலைவாசல் உழவர் சந்தைகளில் நிலவிய தக்காளி விலை விவரங்கள் ஆய்வு மற்றும் வர்த்தக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

விலை விவர மற்றும் வர்த்தக ஆய்வுகளின் முடிவில், தக்காளி விலை அடுத்துவரும் இரண்டு மாதங்களில் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாகக் கணிக்கப்பட்டுள்ளது. மேலும், தக்காளியின் பண்ணை விலை அக்டோபர் 2014ல் கோயம்புத்தூர் மற்றும் ஒசூரில் கிலோவிற்கு ரூபாய் 20 -22 வரையும், ஒட்டன்சத்திரம் சந்தையில் கிலோவிற்கு ரூபாய் 16 -18 வரையும் மற்றும் தலைவாசல் சந்தையில் கிலோவிற்கு ரூபாய் 18 - 20 வரையும் இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. இப்பண்ணை விலை அடுத்துவரும் மூன்று மாத பருவமழைக்கு ஏற்பமாறுவதற்கு வாய்ப்புள்ளது. இத்தகவலின் அடிப்படையில் விவசாயிகள் தங்களது ஆடிப்பட்ட தக்காளி விதைப்பை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**கத்திரி**

தமிழ்நாட்டில் சேலம், திண்டுக்கல், வேலூர் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் கத்திரி அதிகளவில் சாகுபடி செய்யப்படுகின்றன. இவற்றுள் சேலம் மாவட்டம் 12 விழுக்காடு உற்பத்தியுடன் முன்னணி வகிக்கின்றது. பொதுவாக இப்பகுதிகளில் கோடை மற்றும் குளிர்காலங்களில் கத்திரி பரவலாக பயிரிடப்படுகிறது.

வர்த்தக மூலங்களின்படி, தற்போது கோயம்புத்தூர், ஒட்டன்சத்திரம் மற்றும் தலைவாசல் சந்தைகளில் வழக்கமான வரத்தை காட்டிலும் குறைவாக உள்ளது. பொதுவாக, கோடை அறுவடை முடிந்த நிலையில் இவற்றின் விலை அடுத்துவரும் மாதங்களில் ஏறுமுகத்தில் இருக்கும். ஆனால் இவ்வருட கோடை பருவமழை பொய்த்ததால் பெரும்பாலான விவசாயிகள் கத்திரி விதைப்பை மேற்கொள்ளவில்லை. கோயம்புத்தூர் மொத்த சந்தையில் வரத்து வெகுவாக குறைந்து காணப்படுகிறது. முக்கிய சாகுபடி பகுதிகளான காரமடை, அன்னூர்

மற்றும் தொண்டாமுத்தூர் வட்டத்தில் இருந்து வரும் காய்கள் அதிக காற்றுதாக்கத்தினால் உதிர்ந்தும் மற்றும் பூச்சிதாக்குதலாலும் சந்தையில் எதிர்பார்க்கப்படும் தரத்தில் இல்லை. கோயம்புத்தூர் மற்றும் ஒட்டன்சத்திர சந்தைகளிலுள்ள வியாபாரிகள் தலைவாசல் மொத்த சந்தையிலிருந்து கொள்முதல் செய்கின்றனர்.

தற்போது, மொத்த சந்தைகளில் கத்திரி விலை அதன் அளவு மற்றும் தரத்திற்கேற்ப கிலோ ரூபாய் 25 முதல் 30 வரை உள்ளது. எதிர்வரும் ஆகஸ்டு -அக்டோபர் மாதங்களில் விலை நிலவரம் பற்றி விவசாயிகள் அறிந்து கொள்ள ஏதுவாக கடந்த 11 வருடங்களில் கோயம்புத்தூர், ஒட்டன்சத்திரம் மற்றும் தலைவாசல் உழவர் சந்தைகளில் நிலவிய கத்திரி விலை விவரங்கள் ஆய்வு மற்றும் வர்த்தக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

மேற்கண்ட மொத்த சந்தைகளின் விலை ஆய்வு மற்றும் வர்த்தக ஆய்வுகளின் அடிப்படையில் வரும் ஆகஸ்டு மற்றும் செப்டம்பர் மாதங்களில் விலை உயர்ந்து காணப்படும். அதற்கடுத்த அக்டோபர் மாதத்தில் விலை சற்று குறையவாய்ப்புள்ளது. இதன்படி, கத்திரியின் ஆடிப்பட்ட சாகுபடியின் அக்டோபர் மாத அறுவடையின்போது பண்ணை விலையானது கிலோவிற்கு ரூபாய் 12 முதல் 15 வரை கோயம்புத்தூர் சந்தையிலும், கிலோவிற்கு ரூபாய் 10 முதல் 12 வரை ஒட்டன்சத்திரம் மற்றும் தலைவாசல் சந்தையிலும் இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. எனவே விவசாயிகள் இந்தவிலைகள் அடிப்படையில் விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**வெண்டை**

தமிழ்நாட்டில் வெண்டை ஆடிப்பட்டம் மற்றும் தைப்பட்டங்களில் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகின்றது. சேலம் மாவட்டத்தில் தலைவாசல், மகுடஞ்சாவடி, வட்டாரங்கள், கோயம்புத்தூர் மாவட்டத்தில் காரமடை, பெரியநாயக்கன் பாளையம் மற்றும் தொண்டாமுத்தூர் வட்டாரங்கள், தேனி மாவட்டத்தில் ஆண்டிப்பட்டி வட்டாரம் மற்றும் திருச்சி மாவட்டத்தில் வையம்பட்டி வட்டாரம் ஆகிய பகுதிகளில் பரவலாக பயிரிடப்படுகிறது.

வர்த்தக மூலங்களின்படி வறட்சியின் காரணமாக கோயம்புத்தூர், ஒட்டன் சத்திரம் மற்றும் தலைவாசல் மொத்த சந்தைகளில் வெண்டை வரத்து குறைந்துள்ளது. கோயம்புத்தூர் மற்றும் ஒட்டன்சத்திர மொத்த சந்தைக்கு தலைவாசல் மற்றும் சேலம் மாவட்ட வைகுந்தம் பகுதிகளில் இருந்து வெண்டை கொண்டுவரப்படுகின்றது. பொதுவாக ஆகஸ்டு முதல் அக்டோபர் வரையான காலகட்டங்களில் வெண்டை விலை குறைந்து காணப்படும். மாறாக தற்போது கோவை சந்தைக்கு தலைவாசல் மற்றும் சேலம் மாவட்டம் வைகுந்தம் பகுதிகளிலிருந்து வரத்து வருவதால் விலை உயர்ந்து இருக்கிறது.

தலைவாசல் சந்தையில் வழக்கமான வரத்து காணப்படுகின்றது. வர்த்தக மூலங்களின்படி பெரும்பாலான விவசாயிகள் வெண்டை சாகுபடி செய்ய ஆரம்பித்துள்ள நிலையில் இவற்றின் வரத்து அடுத்துவரும் மாதங்களில் அதிகரித்து அவை கோயம்புத்தூர் மற்றும் ஒட்டன்சத்திரம் சந்தைக்கும் வரவாய்ப்புள்ளது.

தற்போது, மொத்த சந்தைகளில் வெண்டை விலை அதன் அளவு மற்றும் தரத்திற்கேற்ப கிலோ ரூபாய் 25 முதல் 30 வரை உள்ளது. எதிர்வரும் ஆகஸ்டு -அக்டோபர் மாதங்களில் விலை நிலவரம் பற்றி விவசாயிகள் அறிந்து கொள்ள ஏதுவாக கடந்த 11 வருடங்களில் கோயம்புத்தூர், ஒட்டன்சத்திரம் மற்றும் தலைவாசல் உழவர் சந்தைகளில் நிலவிய வெண்டை விலை விவரங்கள் ஆய்வு மற்றும் வர்த்தக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

வர்த்தக மூலங்கள் மற்றும் விலை விவர ஆய்வின்படி ஆடிமாதத்தில் விதைக்கும் வெண்டைக்கு அக்டோபர் மாதத்தில் அறுவடைக்கு வரும் போது கோயம்புத்தூர் மற்றும் ஒட்டன்சத்திரம் மொத்த சந்தையில் கிலோவிற்கு ரூபாய் 10 முதல் 15 வரையிலும். தலைவாசல் மொத்த சந்தையில் கிலோவிற்கு ரூபாய் 10 முதல் 12 வரையிலும் கிடைக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட விலைகள் அடிப்படையில் விவசாயிகள் வெண்டை விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

<u>மேலும் விவரங்களுக்குதொடர்பு கொள்ள</u>

உள்நாட்டுமற்றும் ஏற்றுமதிசந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரகமேம்பாட்டுஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422 -2431405

<u>மேலும் தொழில் நுட்பவிவரங்களுக்குதொடர்பு கொள்ளவும்</u>

பேராசிரியர் மற்றும் தலைவர்,
காய்கறிப் பயிர்கள் துறை,
தோட்டக்கலைக் கல்லூரிமற்றும் ஆராய்ச்சிநிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயமுத்தூர்-641 003.
தொலைபேசி எண் - 0422-6611374, 0422-6611283

மக்கள் தொடர்பு அலுவலர்